உ

ஸ்ரீ சுவாமிநாதம்

திருப்புகழமிர்தம்.

(All Rights Reserved)

" குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றாள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம் "

மலர் 2 Vol. 2	ஈஸ்வர வருஷ தைமீ 1௳ ஜனவரி—1938	இதழ் 10. No. 10.

திருப்புகழ்.

திருச்செந்தூர்.

(24) கொம்பனை யார்காது, மோதிரு, கண்களி லாமோத சீதள
குங்கும பாடீர பூஷண நகமேவு
கொங்கையி னீரவி மேல்வளர் செங்கழு நீர்மாலை சூடிய
கொண்டையி லாதார சோபையி லமராதே
உம்பர்கள் ஸ்வாமீ நமோநம எம்பெரு மானே நமோநம
ஒண்டொடி மோகா நமோநம எனநாளும்
உன்புக ழேபாடி நானினி அன்புட னாசார பூசை செய்
துய்ந்திட வீணாள்ப டாதருள் புரிவாயே
பம்பர மேபோல ஆடிய சங்கரி வேதாள நாயகி
பங்கய சீபாத நூபுரி கரசூலி
பங்கமி லாநீலி மோடிப யங்கரி மாகாளி யோகினி
பண்டுசு ராபான சூரனொ டேதிர்போர்கண்
டெம்புதல் வாவாழி வாழியெ னும்படி வீறான வேல்தர
என்றுமு ளானேம னோகர வயலூரா
இன் சொல்வி சாகாக்ரு பாகர செந்திலில் வாழ்வாகி யேயடி
யென்றனை யீடேற வாழ்வருள் பெருமாளே

பதவுரை.

பம்பரமே போல ஆடிய சங்கரி - (அம்பலத்தினில் இறைவன் நிர்த்தனஞ் செய்யுங்கால்) பம்பரத்தைப்போலவே சுழன்று ஆடிய சங்கரியும், வேதாள நாயகி — வேதாள பூத கணங்களுக்குத் தலைவியும், பங்கய சீ பாத நூபுரி - தாமரைக்கு நிகரானதும் சிறப்பு வாய்ந்ததுமான திருவடிகளில் சிலம்புகளை யணிந்துகொண்டிருப்பவரும், கரசூலி - சூலத்தைக் கரத்திலே தாங்கிக்கொண்டிருப்பவரும், பங்கம் இலா நீலி - குற்றமில்லாத நீலநிறத்தையுடையவரும், மோடி - துர்க்கையும், பயம்ஹரி - அடியார்களது பயத்தை அகற்றுபவரும், மாகாளி - மகா காளியும், யோகினி - யோகினி யென்னுந் தேவதையாக இருப்பவருமாகிய உமாதேவியார், பண்டு சூராபான சூரனோடு - முன்னாளில் கள்ளருந்தும் அசுரகுலத்திற் பிறந்த சூரபன்மனோடு, எதிர் போர் கண்டு — எதிர்த்துப் போர் செய்ததைக்கண்டு, எம் புதல்வா வாழி வாழி எனும்படி - "எமது குமாரனே ! நீ நீடூழி வாழ்வாயாக" என்று உன்னை வாழ்த்தும்படி, வீறான வேல்தர - வெற்றியையுடைய வேலாயுதத்தைத் தரித்துக்கொண்டிருப்பவரே ! என்றும் உளானே — எந்நாளிலும் அழிவின்றி நித்திய பரவஸ்துவாகவுள்ளவரே ! மனோகா — விரும்பப்படுந் தன்மையினரே ! வயலூரா - வயலூர் எனனும் புண்ணிய திருத்தலத்தில் எழுந்தருளியிருப்பவரே ! இனசொல விசாகா— இனிய சொற்களைப்பேசும விசாகமூர்த்தியே !, க்ருபை ஆகர - கருணைக்கு உறைவிடமானவரே ! செந்திலில் வாழ்வு ஆகி - திருச்செந்தூரில் எழுந்தருளி, அடியேன் தனை ஈடேற வாழ்வு அருள் - அடியேனை உய்யுமாறு நல்வாழ்வை யருளிய, பெருமாளே - பெருமையிற் சிறந்தவரே !, கொம்பு அனையார் — கொம்பைப்போல் ஒல்குந்தன்மையுடைய (விலை) மகளிரது, காது மோது இரு கண்களில் - காதுகள் வரையிலும் சென்று மோதுகின்ற நீண்ட இருகண்களின அழகிலும், ஆ மோத - மகிழ்ச்சியை விளைவிப்பதும், சீதள - குளிர்ந்துள்ள, குங்கும - குங்குமக் கலப்புகளையும, பாடீர - சந்தனக் குழம்பையும், பூஷண - ஆபரணங்களையும் அணிந்துள்ளதும், நகம் மேவும் - மலைபோனறதுமாகிய, கொங்கையில் - தனபாரங்களின் அழகிலும், நீர் ஆவி மேல் வளர் - நீர் நிலைகளில் பூத்த, செங்கழு நீர் மாலை சூடிய கொண்டையில் - செங்கழுநீர் மலர்களை முடித்துள்ள கூந்தலின் அழகிலும், ஆதார சோபையில் - உடம்பின் அழகிலும், மருளாதே - மனமயக்கம் அடையாமல், உம்பர்கள் ஸ்வாமி நமோ

நம - தேவர்களுக்குத்தலைவரே! நமஸ்காரம் நமஸ்காரம், எம்பெருமானே நமோநம - அடியேங்களாகிய எமக்கு நாயகரே! நமஸ்காரம் நமஸ்காரம்; ஒண்தொடி மோகா நமோநம - பிரகாசமான வளையல் களையணிந்துள்ள வள்ளிநாயகியார் மீது மோகமுடையவரே! நமஸ்காரம் நமஸ்காரம்; என நாளும் - என்று நாள்தோறும், உன் புகழே பாடி - தேவரீரது திருப்புகழையே பாடி, நான் இனி அன்புடன் ஆசார பூசை செய்து - அடியேன் இனிமேல் தேவரீரிடத்து மெய்யன்போடு தூய்மையாக இருந்து உம்மைப் பூசித்து, நாள் வீண்படாது உய்ந்திட - அடியேனுடைய வாழ்நாள் வீணாகாது உய்யுமாறு அருளபுரிவாய் (ஏ-அசை) திருவருள் புரிவீர்.

பொழிப்புரை.

(சிவபெருமான் சிற்றம்பலத்தில் இன்ப நடனம் புரியுங்கால் அந்நடனத்திற் கியைய) பம்பரத்தைப்போல் திருநடனம்புரிந்த சங்கரியும், பூத வேதாள கணங்களுக்குத் தலைவியும், தாமரை மலரையொத்த சிறப்பு வாய்ந்த திருவடிகளில் சிலம்புகளை யணிந்துகொண்டிருப்பவரும், திரிசூலத்தைக் கரமலரில் தரித்துக்கொண்டிருப்பவரும், குற்றமில்லாத நீலநிறத்தையுடையவரும், துர்க்கையும், அடியார்களது அச்சத்தை அகற்றுபவரும், மகா காளியும், யோகினியென்னுந் தேவதையாக இருப்பவரும் ஆகிய உமாதேவியார், முன்னாளில் மதுபானஞ்செய்யும் அசுரனாகிய சூரபன்மனோடு எதிர்த்து போர்புரியக்கண்டு, "எமது குமாரனே! நீ நீடூழி வாழ்வாயாக" என்று வாழ்த்துமாறு வெற்றி பொருந்திய வேற்படையைத் தரித்தவரே! என்றும் அழியாத நித்திய சொரூபரே! விரும்பப்படுந் தன்மையினரே! வயலூரில் எழுந்தருளியிருப்பவரே! இனிய சொல்லையுடைய விசாகமூர்த்தியே! கருணைக்கு உறைவிடமானவரே! திருச்செந்தூரில் வாழ்ந்துகொண்டு அடியேன் ஈடேறுமாறு திருவருள் செய்யும் பெருமை மிக்கவரே! பூங்கொம்பைப்போல் அழகாக ஒல்குந் தன்மையுடைய விலைமகளிரது காதுவரை நீண்டுள்ள இருகண்களிலும், குளிர்ந்த குங்குமக்கலப்பையும் சந்தனக்குழம்பையும் அணிந்துகொண்டு மகிழ்ச்சியைத் தருவதும் மலைக்கு நிகரானதுமாகிய தனபாரங்களிலும், நீர் நிரம்பிய தடாகங்களில் பூத்துள்ள செங்கழுநீர் மாலையை முடித்துள்ள கூந்தலிலும், உடலின் அழகிலும், அடியேன் மனத்தை வைத்து மயக்கத்தையடையாமல், தேவர்களுக்குத் தலை

வரே! நமஸ்காரம் நமஸ்காரம்; எமது பெருமானே! நமஸ்காரம் நமஸ்காரம்; பிரகாசிக்கும் வளையலை யணிந்துள்ள வள்ளிபிராட்டியார் மீது மோகத்தையுடையவரே! நமஸ்காரம நமஸ்காரம என்று தினந் தோறும் தேவரீரது திருப்புகழ்ப்பாமாலைகளையே பாடி அடியேன் (அவமே சென்ற நாள் சென்றாலும்) இனியாவது அன்புடனும் ஆசாரத்துடனும் தேவரீரது திருவடிககமலங்களை பூசித்து, வீண் நாள் படாது உய்யுமாறு திருவருள் புரிவீர்.

விரிவுரை.

கொம்பனையார் :—

பெண்கள் இடை சிறுத்து இளங்கொடிபோல் அசையுந் தன்மையுடையோர் ஆதலால் கொம்புக்கு நிகரானவர் என்று கூறுவது கவிகளின் மரபு. பிறரும் இவ்வாறு வருமாறு காண்க.

"பூத்தவிளங் கொம்பனைய பூவைமுகங் கோடாமல்"

—மகாபாரதம்.

காது மோது இரு கண்களில் :—

கண்கள் நீண்டிருப்பது மாதர்க்குச் சிறந்த இலக்கணமாம். அங்ஙனம் நீண்டிருப்பதால் அக் கண்ணிலுள்ள கருவிழிகள் பிறழ்வது காதுகளுடன போர்புரிய வருவதுபோல் தோனறுகிறது என்பது கவிநயம். இதனை, மன்மதனது கொலைசெய்யும் நஞ்சுபூசப்பட்ட கொடிய வேலபோல் அஞ்சனமெழுதிய விழியானது தன்னோடு போர்செய்ய வருவதலினாலே அக் கணணின் பகையாகிய குவளை மலரை தான் படைத்துணையாகச் சோதனைவைப்பதுபோல் குவளை மலரை ஒரு பெண அழகிய காதினமிசை சூடினாள் என்னும் பொருள் தரும் அடியில் கணட அழகிய செய்யுளையுங் காண்க.

வேனலம்பதி கோலைவிட மூட்டிய வெவ்வேல்
மான அஞ்சன மெழுதிய விழிபோர வரலால்
தானதனபகை தனைததுணை கொண்டுறுந் தகைபோல்
பானலஞ்செவி மிசையணிந் தனளொரு பாவை.

—பிரபுலிங்க லீலை.

நகமேவு :—

நகம் - மலை. நகக்குறி பொருந்திய தனம் என்று கூறுவாருமுளர்.

உம்பர்கள் ஸ்வாமீ :—

மூவர் தேவாதிகள் தம்பிரானுதலால் முருகப்பெருமான் தேவர்கள் யாவருக்கும் தலைவராவர்.

" தேவதேவ தேவாதிதேவப் பெருமாளே "

—(பேராவரு) திருப்புகழ்

தேவா நாயக னாகியே யென்மனச் சிலைதனி லமாந்தோனே
மூவர் நாயக னெனமறை வாழ்த்திடு முத்தியின் வித்தேயிவ
கேவ ராயினு நினைதிருத் தணிகைசென றிறைஞ்சிடி னவரேயென
பாவ நாசஞ் செய் தேனறனை யாட்கொளும் பரஞ்சுடர்கண் டாயே.

—திருவருட்பா

ஒண்டொடி மோகா :—

வள்ளி யென்பது ஜீவான்மா ; அதனை யாட்கொள்ளவேண்டு மென்ற மோகம் தனையினால் முருகப்பெருமானுக்குளது.

" தணியா அதிமோக தயாபரனே "

—அனுபூதி.

நாளும் உன்புகழே பாடி .—

பிரமனது கையெழுத்தை அழித்து இனி தாயுதரத்திற் பிறக்க வொட்டாத வேலாயுதனது திருப்புகழையே பாடுதல வேணடும். பிற புகழ்க்கவிகளைக் கற்று பாடுதல் கூடாது. பிறப்பிறப்பற்ற பெம்மானாகிய முருகன் புகழொன்றே இம்மை மறுமை நலன்களை நல்கும்

" அழித்துப் பிறக்கவொட்டா அயில்வேலன் கவியை யன்பால்
எழுத்துப் பிழையறக் கற்கினறிலீா "

" கிழியும் படியடற் குன்றெறிந்தோன் கவி கேட்டுருகி
இழியுங் கவி கற்றிடா திருப்பீர் "

—அலங்காரம்.

நாகமலையில் வாழும் கந்தசுவாமியே ! உன் திருப்புகழை யான் கேட்டறிந்த மாத்திரத்தில் நினது கோழிக்கொடி என் ஆத்துமாவை அபயங் கொடுத்து ஆண்டுகொண்டது ; உன் வேலாயுதம் பிறப்புக் கிடமான பேராசையை ஒழித்துவிட்டது; உன் தேவிமாரது திருவடியுங் கிடைத்தது; இனி யான் தேடவேண்டியது என்ன இருக்கிறது? என்னும் பொருள்தரும் அருணகிரிநாதரது அருள் வாக்கையுட உன்னுக.

சேவிக்குன்ற வாரண நல்கிசை பூட்டவன் சிந்தையம்பு
சேவிக்குன்ற வாரண மஞ்சலென் றுண்டது நீண்ட கன்மச்
சேவிக்குன்ற வாரண வேலாயுதஞ் செற்ற துற்றன கட்
சேவிக்குன்ற வாரண வள்ளிபோற்றுண் மற்றென் றேடுவதே.

—அந்தாதி,

ஆதலால் "யார் வேண்டினும் கேட்டபொருளீயுந் தியாகாங்க சீலனை" முருகப்பெருமானது தெய்வீகம்பொருந்திய திருப்புகழையே அன்புடன் ஓதி அப்பரம பிதாவினது திருவருளைப் பெறுவார்களாக.

"கருப்புகழைக் கேட்குமோ கானமயில் வீரன்
திருப்புகழைக் கேட்குஞ் செவி"

அன்புடனாசார பூசை :—

பூஜா எனனும் வடசொல் ஆகார ஈறுகெட்டு பூசையென்று மருவியது. பூ - கன்மங்களைப் பூர்த்திசெய்து, ஜா - சிவஞானத்தை யுதிக்கச்செய்வது என்பது பொருள். இப்பூசை ஒவ்வொருவரும் செய்யற்பாலன. பூசைக்கு ஆசாரமும் அன்பும் சிறந்த அங்கங்களாம். மனவாக்குகட் கெட்டாத ஆண்டவனைப் பூசிப்பதற்கு நமது கரங்களும் ஏனைய உறுப்புகளும் "என்ன மாதவஞ் செய்தனவோ" என்று இடையறாத அன்புடனும், தீய எண்ணங்களை எண்ணாமல் மனோசுத்தமுடனும், அவமொழிகளைப் பேசாமல் வாக்கு சுத்தமுடனும் அசுத்தப் பொருள்களைத் தொடாமல் காய சுத்தமுடனுமாக இருந்து இறைவனைப் பூசிக்கவேண்டும்.

வீணாள்படாது அருள்புரிவாயே :—

கிடைத்தற்கரிய வாழ்நாளை அவத்தொழில்களிலும் களியாடல்களிலும் வீண் சிந்தனைகளிலுமாக வாளா கழிக்காமல் "இரை தேடுவதோடு இறையையுந் தேடு" என்ற அமுதவசனப்படி, உடம்பை வளர்ப்பதற்காக உழைப்பதோடு உயிரை வளர்ப்பதற்கும் பாடுபடவேண்டும். சிவசிந்தனையும், சிவ வழிபாடுமே உயிருக்கு உறுதி பயப்பனவாம்.

"வீணே நாள் போய்விடாமல் ஆறுமுகமீதில்
ஞானோபதேசம் அருள்வாயே"

—(மாலாசை) திருப்புகழ்.

எம்புதல்வா வாழிவாழி எனும்படி :—

சூரபன்மாவோடு தமது குமாராகிய குகப்பெருமான் போர் புரியுங்காலை, உமாதேவியார் தமது புதல்வனுக்கு வெற்றியுண்டாமாறு "வாழிவாழியென்று" வாழ்த்துகிறார் ஆணவமலமாகிய சூரபன்மன் காமக்குரோதாதி துர்க்குணங்களாகிய அசுரர்களுடன் அறநெறி பிறழ்ந்து, சமதமாதி சற்குணங்களாகிய அமரர்களுக்குத் துன்பம் புரிந்தஞான்று, மறத்தையழித்து அறத்தை நிலைநாட்டுமாறு, ஞான பண்டிதராகிய எந்தை கந்தவேளை அசுத்த போகமாகிய கள்ளைக் குடித்து மயங்கியுள்ள அவ்வாணவ மலமாகிய சூரனோடு எதிர்த்துப் போர்புரிந்து ஆணவமலத்தை யழிப்பதைக்கண்ட அருட்சத்தியாகிய அம்பிகை மனமகிழ்ந்து, "சத்துவ வடிவாகிய சிவபெருமானுக்கும் சித்துவடிவமாகிய எனக்கும தோன்றிய ஆனந்தவடிவமாகிய அண்ணலே! நீ ஆன்மாக்களின் ஆணவமலத்தை யழிபபதற்காகவே வெளிப்பட்டுத் தோனறினை. ஆதலால் ஆன்மாக்களது மலதனைதக கெடுத்து ஆனந்தத்தைக்கொடுததுக்கொண்டு நீடுழி வாழ்வாயாக" என்று வாழ்த்துகிறார் என்பது அதன் தத்துவம்.

என்று முளானே —

நங் குமரக் கடவுள் மாறுபாடின்றி என்றும் ஒருபடித்தாக விளங்குகின்ற நித்திய வடிவினர்.

மனோகர :—

இளங் குமாரமூர்த்தியாய்த் திகழும் இன்பவடிவினராதலால் எல்லோராலும் விரும்பப்படுகின்றார்

வயலூரா :—

அருணகிரியாரைத் திருவருணையில் ஆண்டுகொண்டு "நம் வயலூருக்குவா" என்று அறுமுகபபெருமான் அருளிச்செய்து, வயலூரில் திருப்புகழில் "இன்ன இன்ன வைத்துப்பாடு" என்று திருவருள்புரிந்த தெய்வீகம் பொருந்திய திவ்விய க்ஷேத்திரமாதலால், அருணகிரியார் தனனை யாட்கொண்ட வயலூரின்மீதுள்ள அளவற்ற அன்பின்பெருக்கால் அடிக்கடி அநேக பாசுரங்களில் "வயலூரா" "வயலூரா" என்று அருளிச்செய்தனர்,

இன்சொல் :—

கருணைக்குறைவிடமாகிய கந்தப்பெருமான் இன்சொல்லையுடையவராயிருக்கின்றனர். ஒவ்வொருவரும் வன் சொல்லை அறவே

ஒழித்து இன் சொல்லையே எந்நாளும் யாரிடத்தும் உரைக்க வேண்டும். நம்மைப்பார்த்துப் பிறர் கடுமையாகப் பேசினால் நமக்கு எத்துணை வருத்தம் உண்டாகிறது? இனிமையாகப் பேசினால் எத்துணை மகிழ்ச்சியுண்டாகிறது. அதனை யுற்று நோக்கி நாமும் பிறரிடத்துப் பேசும்போது கடுஞ்சொற்களை மறந்தும் பேசாது இனிய சொற்களையே பேசுவோமாக.

> இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
> வன்சொல் வழங்கு வது
>
> —திருக்குறள்.

கருத்துரை.

உமாதேவியார் வாழ்த்துக்கூற வெற்றிவேலைத் தாங்கியுள்ளவரே! சித்தரே! மனோகரமானவரே! வயலூரில் எழுந்தருளியவரே! விசாகரே! கிருபாகரரே! திருச்செந்தூரரே! விலைமகளிரது கண்கள், தனங்கள், கரிய கூந்தல், அழகிய உடல் என்பனவற்றைக்கண்டு மருளாமல், தேவரீரது திருப்புகழையே பாடி தேவரீரை அன்புடனும் ஆசாரத்துடனும் பூசித்து வீணாள் படாமல் உய்ந்திடத் திருவருள் புரிவீராக.

யக்ஷப்பிரச்னை.

சே.—இந்திரியங்களால் விஷயங்களை அனுபவிக்கிறவனும், சிறந்த புத்தியுள்ளவனும், உலகத்தாரால் (செல்வமுள்ளவனென்று) பூஜிக்கப்பட்டவனும் எல்லாப் பிராணிகளுக்கும் ஸம்மதனுமான எந்த மனிதன் மூச்சுவிட்டுக்கொண்டிருந்தும் உயிரில்லாமலிருக்கிறான்.

ப.—எவன் தேவதைகள், அதிதிகள், வேலைக்காரர்கள், பிதருக்கள், தான் இந்த ஐவர்களுக்கும் ஹவிஸ் முதலியவைகளைக் கொடுக்கவில்லையோ அவன் மூச்சுவிட்டுக்கொண்டிருந்தாலும் உயிரில்லாதவனே.

உ

ஓம் ஸுப்ரஹ்மண்யாய நம:

ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்க ஸ்தோத்திரம்.

(ஆதிசங்கரர் அருளிச்செய்தது)

(268-ம் பக்கத் தொடர்ச்சி.)

मुनीनामुदाहो नृणां भक्ति भाजा
मभीष्टप्रदा सन्ति सर्वत्र देवाः।
नृणामन्त्यजानामपीस्वार्थ दाने
गुहाद्दैव मन्यन् नजाने नजाने ॥

(27) முனீநா முதாஹோ ந்ருணாம் பக்தி பாஜா
மபீஷ்டப்ரதா ஸந்தி ஸர்வத்ர தேவா: |
ந்ருணா மந்த்ய ஜாநா மபீஸ்வார்த்த தானே
குஹாத்தைவ மன்யந் நஜாநே நஜாநே ||

பதவுரை.

முனீநாம் - முனிவர்களுக்கும்,

உதா பக்திபாஜாம் - அவ்வாறு பக்தியுள்ள மனிதர்களுக்கும்,

அபீஷ்டப்ரதா: தேவா: ஸர்வத்ர ஸந்தி - விருப்பத்தையளிக்கும் தேவர்கள் எங்கும் இருக்கின்றார்கள்,

அந்த்ய ஜாநாம் ந்ருணாம் அபீஸ்வார்த்த தானே - சண்டாளர்களாகிய மக்களுக்கும் கூட விருப்பத்தை அல்லது முத்தியையளிப்பதில்,

குஹாத் அன்யம் தைவம் நஜானே நஜானே - முருகக்கடவுளைத் தவிர வேறு தெய்வத்தை நான் அறியேன்,

பொழிப்புரை.

முனிவர்களுக்கும் மற்ற பக்தியுள்ள பக்தர்களுக்கும் (மோக்ஷத்தை யொழியா) விருப்பத்தையளிக்கும் தேவர்கள் எங்கும் இருக்கின்றார்கள். ஆனால், கல்வியறிவற்றவர்களும், உயர் குலத்தோர் என்பவரால் 'சண்டாளர்' என்று ஒடுக்கப்பட்டிருப்பவரும ஆகிய மக்களுக்குங் கூட மோக்ஷம் வரையிலுமுள்ள எல்லா புருஷார்த்தங்களையும் அளிக்கும் அருளும் ஆற்றலும் படைத்தவர் முருகப்பெருமான் ஒருவரே யாவர்.

இதனால் கருணாமூர்த்தியாகிய அப்பெருமானது அருட்பெருமையையறிய ஆற்றலற்ற சில மந்த மதியினர் அற்ப ஆற்றலையுடைய சில தேவர்களுக்குப் பரத்துவஞ் சொல்லித்திரிவது பாபவிசேஷத்தினாலென்றும் தெரிவிக்கப்பட்டது.

कलत्रं सुधाबन्धु वर्ग पशुर्वा
नरोवाथनारी गृहे ये मदीयाः ।
मजयन्तो नमन्दः स्तुवन्तो भवन्तम्
स्मरन्तश्चते सन्तु सर्वे कुमारः ॥

(28) களத்ரம் ஸுதா பந்து வர்க: பசுர்வா
நரோவாத நாரீ க்ருஹேயே மதீயா: ।
யஜந்தோ நமந்த: ஸ்துவந்தோ பவந்தம்
ஸ்மரந்தஸ்ச தேஸந்து ஸர்வே குமார: ॥

பதவுரை.

க்ருஹே	- கிருஹத்தின்கண்,
மதீயா: யே	- என்னைச் சார்ந்த யாதொரு,
களத்ரம், ஸுதா: பந்துவர்க: பசு: நரம், நாரிவா ஸந்தி தே ஸர்வேஹே குமார!	மனைவி, புத்திரர்கள், உறவினர் பசு, ஆண், பெண் ஆகிய அவ்வெல்லாரும ஓ குமாரகடவுளே!
பவந்தம் யஜந்தம் நமந்தம் துவந்தம் சஸந்து	தேவரீரைப் பூசிக்கின்றவர்களாய் நமஸ்கரிக்கின்றவர்களாய் துதிக்கின்றவர்களாய் இருக்கக் கடவர்.

பொழிப்புரை.

ஓ குமாரக் கடவுளே ! என்னைச் சார்ந்தவர்கள் எல்லோரும் தேவரீரது திருவடியின்கண் அன்புவைத்துப் பூசிக்கின்றவர்களாயும் நமஸ்கரிக்கின்றவர்களாயும் ஸ்தோத்திரம் செய்கின்றவர்களாயும் இருக்க அருளபுரியவேண்டும்.

இதனல் எலலாப்பிராணிகளும முருகப்பெருமானுடைய அடிமைகளாதலால் அவரது திருப்பணியைச் செய்ய அவசியம் கடமைப் பட்டிருக்கிறாகள என்பது தெரிவிக்கப்பட்டது.

मृगाः पक्षिणो दं सखाये चदुष्टा
स्तथा व्याधयो वाधकाये मदङ्गे ।
भवच्छक्ति दीक्षणाग्रभिन्नाः सुदूरे
विनस्यन्तु ते सूर्णित क्रौञ्च शैल ॥

(29) ம்ருகா: பக்ஷிணோ தம்சகாயேச துஷ்டா
ஸ்ததா வ்யாதயோ பாதகாயே மதங்கே ।
பவச் சக்தி தீக்ஷ்ணா காபின்னா: ஸுதூரே
விநஸ்யந்து தே சூர்ணித க்ரௌஞ்ச சைல ॥

பதவுரை.

ஹே சூர்ணிதகரௌஞ்ச சைல - ஓ கிரௌஞ்ச பர்வதத்தைப் பொடியாக்கிய பெருமானே !

துஷ்டா - கொடியவைகளான,

யே ம்ருகா: பக்ஷிண: தம்சகா.- யாதொரு விலங்குகள், பறவைகள், கடிக்கும் படியான காட்டீககள், பாம்புகள்,

ததா மதஙகே பாதகா. - அவ்வாறே எனது உடலை வருத்துகின்ற,

யே வ்யாத: ஸந்தி - யாதொரு நாய்களும் உண்டோ,

தே - அவைகளெல்லாம்,

பவச் சகதி தீக்ஷ்ணாகரபின்னா:- தேவரீருடைய வேலாயுதத்தின் கூர்மையான முனையால் பிளக்கப்பட்டு,

ஸுதூரே விநஸ்யந்து - வெகுதூரததிலேயே (என்னை நெருஙகுமுன் னேயே) நாசத்தை யடையட்டும்.

உ

ஓம் கந்தாய நம:

கந்தர் திருவிளையாடல்

(274-ம் பக்கத் தொடர்ச்சி.)

உலகங்கள் முழுதுஞ் சென்று அரிய திருவிளையாடல்களைப் புரியும் குமாரக்கடவுள் பின்னர் ஒரு திருவிளையாடல் செய்வாராயினர். குலமலைகளனைத்தையும் ஓரிடத்தில் ஒருங்கு கூட்டுவர்; அம்மலைகளைப் பின்னர் தலைகீழாகப் பூமியில் நிறுத்துவார்; அலைகளையுடைய எழு கடல்களையும் ஒன்றாகச்செய்வர்; சக்ரவாளகிரியை பாதாளம் புகுமாறு பாதத்தால் அழுத்துவர்; கங்கா நதியை ஓடவிடாமல் அடைப்பர்; பாதாள லோகத்துள்ள எட்டு நாகங்களையும் பிடித்து மேருமலை முதலிய பெரிய மலைகளிலே பூட்டிக்கட்டி உயிர்களுக்குச் சிறிதுகூடத் துன்பமில்லாவண்ணம் சிறு தேர்களாக்கி உருட்டிச் செல்வர். திசைகளிலுள்ள ஐராவதம்முதலிய எட்டு யானைகளையும் கொண்டுவந்து ஒன்றோடொன்று போர்புரியுமாறு செய்வர். ஆகாயத்திலுள்ள கங்காசலத்தால் வடவாமுகாக்கினியை அவிப்பர்; கருடனையும் வாசுகியையும் பிடித்து ஒன்றோடொன்று மாறுகொண்டு போர்புரியச் செய்

பொழிப்புரை.

ஓ க்ரௌஞ்ச சயிலத்தைப் பொடியாக்கிய கடவுளே! தேவரீரது திருவடிகளுக்கு அடிமையான என்னைத் துன்புறுத்த வரும் கொடிய உயிர்களும் அவ்வாறே கொடிய நோய்களும் தேவரீரது வேலாயுதத்தின் கூர்மையான முனையினாற் பிளக்கப்பட்டு என்னை நெருங்கு முன்னமேயே நாசத்தையடையவேண்டும்.

இதனால் முருகக்கடவுளின் அன்பர்களுக்குத் துன்பமிழைக்க நினைக்கும் கொடிய உயிர்கள் அக்கணமே அழிந்துவிடுமென்றும் அவ்வாறே எவ்வித நோய்களும் அவ்வடியவர்களை நெருங்கித் துன்புறுத்தாவென்றும் தெரிவிக்கப்பட்டது.

(தொடரும்).

வர்; பாதாளலோகத்துள்ள நாக இனங்களைப் பூதலத்தில் சேர்த்து, பூதலத்திலுள்ள கடல்களைப் பாதாள லோகத்திற் புகுமாறு விடுவர்; சூரியனைச் சந்திரமண்டலத்திலும் சந்திரனைச் சூரியமண்டலத்திலுமாக மாற்றிப் பரிவர்த்தனையாக விடுவர், அஷ்ட திக்குப்பாலர்களுடைய பதங்களனைத்தையும் முன்னையிடத்தினின்றும் பறித்துப் பிறழ வைப்பர்; மேகங்களுக்குள்ளிருந்த மின்னல்களையும் இடிகளையும் பற்றி மாலையாக்கித் தரித்துக்கொள்வர்; சூரிய சந்திரர் முதலிய கிரகங்களும் பிறவும் விண்ணிற் செல்லும் விமானங்களையும் தேர்களையும் பிணித்த கயிறுகள் துருவன் கரத்திலிருப்பன, அவற்றுள் வேண்டுவனவற்றை இடையில் அரிந்து, பூமியிலும் திசைகளிலும் செல்லுமாறு விடுப்பர், ஆகாயத்திற் செல்லும் விற்களிரண்டையும் பற்றி, கிரகங்கள் நட்சத்திரங்கள் இவற்றை உண்டைகளாகக் கொண்டு, தேவர்களது தலை மார்பு கழுத்து முகம் இவைகளைக் குறியாகக்கொண்டு எய்து வில்வன்மையைக் காட்டுவர்; சிவன்முத்தருக்கேயன்றிப் பிறருக்கு வெளிப்படாத நிருமலராகிய எமது குமாரக் கடவுள் சுராசுரர்களும் நரர்களும் ஏனோரும் தங்கள் தங்கள் உள்ளமும் உடம்பும் தளர்தலன்றி யாதொருதீங்கும் நேராவண்ணம், எண்ணில்லாத இன்பத்தை நல்கும் திருவிளையாடல்களைச் செய்தருளினார்.

அப்பொழுது பூமண்டலத்திலுள்ள அசுரர்கள் இவ் வற்புத ஆடல்களை நோக்கி, தாம் பெரும் பாவிகளாதலால், அறுமுகப்பெருமானது திருவுருவத்தைக் காணாதவராகி, "ஆ! இவ்வண்ணம் புரிந்தார் யாவர்?" என்று வியப்புற்றுத் தியங்கினார்கள். அந்த அசுரர்கள் பின்னுஞ் சிலநாள் உயிரோடிருக்குமாறு ஆயுள்பெற்றுள்ளமையால், முருகக்கடவுள் அவர்களுக்குத் தமது திருமேனியைக் காட்டாது உலவினார். அவர்கள் தேடித் தேடி ஒருவரையுங் காணாமையால் "அரியயனாற் காணப்படாத அரனது மாயமே இது" என்றார்கள். குமாரக்கடவுளது செய்கையை மண்ணுலகத்திலுள்ள மனிதர்கள் கண்டு, "நெறி தவறி கொடுங்கோல் செலுத்துகின்ற அசுரர்கள் எல்லோரும் இறப்பது திண்ணம்; இது அதற்கு அடையாளமாகத் தோன்றிய விம்மிதம்போலும்" என்றார்கள். திசைபாலர்களும் சூரியன் சந்திரன் முதலாயினோரும் மனம் வருந்தி, ஒருங்குகூடி, முருகப்பெருமானது திருமேனியைக் காணாதவராகித் திகைத்து, இது அசுரர்கள் செய்கையன்று வேறு யாரோ செய்தார்; இந்திரன் சிலரோடு மகாமேருகிரியில் இருக்கின்றனன்; நான்முகக்

கடவுளும் அங்கிருக்கின்றார்; நாமெல்லாம் அவர்களிடத்திற்சென்று இதனைச் சொல்வோம்" என்று துணிந்துகொண்டு, சூரனுக்கும் அஞ்சித் துயரத்தோடு சென்று, மேரு சிகரத்தை அடைந்தார்கள். அங்கே, அறுமுகக்கடவுளுடைய திருவிளையாடலைக்கண்டு அவர் திருவுருவத்தைக்காணாது வருந்தியிருந்த இந்திரனைக்கண்டு, அவன்முன சென்று அடிவணங்கி, இருந்துகொண்டு: "மண்ணுலகத்திலும் விண்ணுலகத்திலும் உள்ளவைகளைப் பண்டைய நிலையினின்றும் யாரோ மாறுபடச்செய்தனர்: அவரை இன்னாரென நாங்கள் அறிகிலோம்; இராக்கதர்கள இது செய்திலர் போலும், இங்ஙனம் நிகழ்ந்தது என்ன?" என்றார்கள். அதனைக்கேட்ட அயிராணி கேள்வன், "நானும் இதனை ஆராய்ந்துகொண்டேயிருக்கின்றேன், சிறிதும் அறிந்திலேன், நினைப்பதற்கும் அரிதாகிய இதனைப்புரிந்தார் யாவரோ? தாமரையில் வைகும் சதுர்முகப் பிரமதேவரைப்போய் வினவுவோம்; வாருங்கள" என்று சொன்னான். உடனே, அந்த இந்திரன் முதலிய இமையவர்கள் உண்மையான தவத்தைப் புரிந்தோராதலால், அவர்கள் விழிப்புலனுக்குத் தெரியும்வண்ணம் அறுமுகக்கடவுள் ஒரு திருமுகமுடைய பாலராய் அம்மலைமீது தோன்றியருளினார்.

தேவர்கள் கொண்ட மயக்கம் நீங்கும்வண்ணம் தமது அற்புதச் செயலைக் காட்டவந்த எம்பெருமான், மகாமேருமலையை அசைத்து தாமரை இதழ்களைக் கொய்து சிந்துதல்போலக் கொடுமுடிகளைப் பறித்து வீசினார். இந்திரன் முதலிய இமயவர்களனைவரும் குமாரக் கடவுளை நோக்கி, "ஐயையோ! மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் நிலைகலங்கத் திரிபு செய்தவன் இவனேயாகும்" என்று சிங்கத்தை எதிர்ந்த விலங்குகளைப்போல் கலங்கி, இவனது ஆற்றலை ஆராயுங்கால் இவனைக் குழந்தை என்று கொள்ளப்படாது; அசுரரினும் இவன் மிகக் கொடியன்; யாவராலும் செய்யமுடியாத மாயா வித்தையையுடையவன்; போர்செய்து இவனை வெல்வேம்" என்று துணிந்து, அக்கினி மலையைச் சூழும் கொசுக்களைப்போல், முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளாகிய முருகப்பெருமானைச் சூழ்ந்தார்கள். அப்பொழுது இந்திரன் முன்னாளிலே தந்தமொடிந்து திருவெண்காட்டிற்சென்று சிவபெருமானைப்பூசித்துத் தந்தம் பெற்றுக்கொண்டு அங்கிருந்த வெள்ளையானையாகிய ஐராவதத்தை நினைக்க அது அம்மேருகிரிக்கு வந்தது. உடனே இந்திரன் போர்க்கோலங் கொண்டு, வச்சிராயுதம், வாள், தண்டு, வில், வேல்முதலிய ஆயுதங்

களை எடுத்துக்கொண்டு, அந்த ஐராவதத்தின் மீதூர்ந்து, குமாரக் கடவுளைத் தேவர்களோடு வளைந்து போர்செய்யத் தொடங்கினன்.

அறுமுகப்பெருமான் தேவர்கள் தம்மைப் பகைவராய் வளைந்ததை நோக்கி, திருநகைசெய்து, யாதும் எண்ணாது முன்போலவே தமது திருவிளையாடலைச் செய்துகொண்டிருந்தார். இந்திரன் பற்பல படைகளை முருகவேள்மீது விடுப்ப, அவை யாவும் அவர்மீது மலர் போற்பட்டன. அதுகண்டு இந்திரன் வச்சிராயுதத்தைவிட்டு ஆர வாரித்தான். அக்குலிசம் எம்பெருமானுடைய திருமார்பிலேபட்டு நுண்மணல்போலப் பொடியாயிற்று. இந்திரன் அதுகண்டு வருந்த ஐராவதம் கர்ஜித்துக்கொண்டு கந்தசுவாமியின் திருமுன்சென்றது. அறுமுகக்கடவுள் அதுகண்டு, சங்கல்பமாத்திரத்தால் ஓர் வில்லையும் பலகணைகளையும் விரைந்து படைத்துக்கொண்டு, வில்லை வளைத்து நாணொலிசெய்து, ஒரு கணையை அந்த யானையின் நெற்றியிற் புக விடுத்தார்; உடனே ஐராவதம் புலம்பிவீழ்ந்து இறந்தது. அது கண்ட இந்திரன் வருத்தமுற்று, “ஐயையோ என்று கூவி, குமரவே ளருகிற்சென்று, கோபத்தோடு தன்வில்லை வளைப்ப, முருகக்கடவுள் ஓரம்பை அவன் புயமீது விடுத்தார். அக்கணைபட்டு இந்திரன் தன் வலிமை இழந்து, விற்போரை விடுத்துத் தன் கையிலிருந்த வேலை பெருமான்மீது விடுத்தான், அவ்வேல் ஒரு சிறு புல்லைப்போலச் சென்று அழிந்தது. அதுகண்ட அமரர்கள் அற்புதமடைந்தார்கள். கந்தப்பெருமான் இந்திரனுடைய முடியை ஓரம்பினாலும், கொடியை ஓரம்பினாலும், மார்பிற் கவசத்தை ஓரம்பினாலும் அழித்து, அவன் மார்பை ஏழம்பினால் துளைத்தார். உடனே அயர்ந்து வீழ்ந்தான். அதுகண்ட மற்றைத் தேவர்கள் தமது அழிவை யெண்ணாது கந்த மூர்த்தியை வளைந்து போர் புரிந்தார்கள். அப்பொழுது அறுமுகப் பரமன் வருணனை நான்கம்பினாலும், இயமனை ஐந்தம்பினாலும், சந் திரனை ஓரம்பினாலும், சூரியனை மூன்றம்பினாலும், வாயுவை இரண்டம் பினாலும், அக்கினியை மூன்றம்பினாலும் கொன்றார். எஞ்சியதேவர் கள் எல்லோரும் குமாரக்கடவுளது போராற்றலை நோக்கி “இவனே இன்றைக்கு எல்லோரையும் கொன்றுவிடுவன்” என்று மனங்கலங்கி ஓடி ஒளிந்தார்கள். அதுகண்ட அறுமுகப்பெருமான் அப்போர்க் களத்தில் தனி நின்று உலவினார்.

இச்செயலை நாரதர்கண்டு, கருணையின் மிகுதியால் ஓடி தேவ குருவாகிய வியாழபகவானிடங் கூறினார். அதுகேட்ட பிரகஸ்பதி

"தேவர்களுடைய வாழ்க்கை அழிந்ததுபோலும்" என்று சொல்லி, மயூரத்தை விரைந்துசென்று. போர்க்களத்தையடைந்து, அங்கு மாண்டுகிடக்கும் தேவர்களைக்கண்டு மனங்கலன்று, அங்கு பரமாறுபக வடிவுடனிருந்து திருவிளையாடல்புரியும் தெய்வசிகாமணியாகிய செவ்வேட் பரமனது திருவடித்தாமரைமீது வீழ்ந்து, துதித்து "எம பெருமானே! பணிணவர் பயங்கெடுக்கவந்த பரமகருணாநிதியே! தாரகன், சிங்கமுகன், சூரன்எனனும் அசுரர்கள் தணடிப்ப இந்திரன் நாள் தோறும் துன்பமுற்று தனது பொன்னுலகத்தைவிடுத்து இமமேரு மலையில் மறைந்திருந்தான் அவன் உமமுடைய திருவடிகளையடைந்து வழிபட்டு, உமமைக்கொணடு தன் பகைவர்களையழிதது, முனபோல் தனது அரசாட்சியைப பெற நினைந்திருந்தான். பலகாலம அருந் தவஞ்செய்து வாடினுன்; சரவணதடாகத்திற்சென்று தேவரீரது திரு வவதாரத்தைக்கண்டு, தன் துயரமெல்லாம நீங்கியதென்று உவகை பூத்தான்: உமக்குத் தொணடுசெய்ய விரும்பிய இநதிரன் நீர் இவ்வாறு திருவிளையாடல் செய்வதை அறிந்திலன்; திருமால் முதலியோா தேடிக்காணுத சிவபெருமானும, உமாதேவியாரும், அவர் திருவருள் பெற்ருேர் சிலருமன்றி உமது அற்புதத் திருவிளையாடலை அறியவல்லார் யாவர்? அடியேம பாசத்தையும் பசுவையும் பகுத்து இஃதித்தன்மையது என்று அறிந்திலேம். பகுதிப்பொருளாகிய உமது பெருங்கருணைத் திருவிளையாடலை எவ்வாறு அறியவல்லேம்; சிற்றறிவுடையேம்; பாசத்தினின்றும நீங்கிலேம், ஆதலால் இந்திரன் தனது அஞ்ஞானங் காரணமாக உமது திருவிளையாடலைத் தீது என்று எண்ணி, உமமோடு போர் புரிந்தனன். நீதிசேர் தணடமே நீர் புரிந்தீர்; மற்றைத் தேவர்களும் அறியாமையால் உம்மை எதிர்த்து இறந்தார்கள. தாய்தந்தைகளே தமக்குப் பிழைசெய்த தம புதல்வர்களைக் கொல்வாராகளாயின், அவர்களுக்கு வேறு யாவர் அருள்செய்வார்? ஞானவடிவாகிய தீனபந்துவே! சரபமானது சிங்கத்தைக் கொல்வதன்றி மின்மினியைக் கொல்லுதல் வெற்றியாகுமா? அருட் பெருங்கடலே! வலியர்களாகிய அசுரர்கள் ஒழியும்வண்ணம வேரோடறுத்தருளும்; எளியவர்களும் உம்முடைய திருவடிகளை மறவாதவர்களுமாகிய தேவர்களுடைய பிழையைப் பொறுத்தருளும். மரக்கலத்திலுலே தாங்கப்படுவோரும அதனுல் தங்கள் செல்வத்தை அடைதற்பாலருமாகிய வணிகர்கள் அதனைச் சாய்த்து அது கவிழ்ப்பத் தாம இறத்தல்போல, உம்மாலே தாங்கப்படுவோரும் உம்மாலே

தங்கள் செல்வத்தை அடைதற்பாலருமாகிய தேவர்கள் உம்மைப் பொருது நீர் கொல்லத் தாம் இறந்தார்கள். தேவதேவ! உம்முடைய அடித்தொண்டர்கள் செய்த பிழையைத் திருவுளங்கொள்ளாதொழிக இவர்கள் இங்கு அறிவுபெற்று எழுமாறு திருவருள்செய்வீர" என்று விண்ணப்பஞ் செய்தார்.

முன்னவர்க்கெல்லாம் முன்னவராகிய முருகப்பெருமான் திருமுறுவல்செய்து இந்திரன் முதலிய தேவர்கள ஐராவதத்தோடும் எழும் வண்ணம திருவுளங்கொண்டருளினார். உடனே ஆகண்டலனாதி அமரர்கள் எழுந்து, மெய்யறிவுதோன்ற, தாங்கள் முன்செய்த செய்கையை அறிந்து, தாங்கள் போர்செய்தது முருகப்பெருமானோடென்று அறிந்து, உள்ளங்கலங்கி, நடுநடுங்கி, எம்பிரானுடைய சரண கமலங்களில பன்முறை வீழ்ந்து பணிந்து, துதித்து மொழிகுழறி, மெய் விதிர்த்து நின்றார்கள.

கந்தநம ஐந்துமுகா நந்தமுரு கேசநம கங்கை யுமைதன்
மைந்தநம பனனிரு புயத்தநம நீபமலா மாலை புனையும்
தந்தைநம ஆறுமுக ஆதிநம சோதிநம தற்பரமதாம்
எந்தைநம என்றும்இளை யோயநம குமாரநம என்று தொழுதார்

இவ்வாறு தொழுதுநின்ற தேவர்களைக்கண்டு கந்தப்பெருமான் "வருந்தா தொழிமின், வருந்தாதொழிமின்" என்று திருவருள்செய்தார். தேவர்கள் துயரமும் அச்சமும நீங்கி, கார்த்திகேய சுவாமியை வணங்கி, "எம்பெருமானே! அமிர்தத்தோடு நஞ்சு கலந்து உண்பவரை அந்நஞ்சன்றி அமிர்தமா கொல்லும்? அதுபோல, உமது திருவருளினாலே செல்வத்தைப்பெறக் கருதிய அடியேங்கள் உம்மோடு போர்புரிந்ததனால், நீர் எம்மைக்கொன்றீரல்லீர், எமது அக்குற்றமே எம்மைக்கொன்றது முன்னாளிலே சிவபெருமானை இகழ்ந்த தக்கனுடைய யாகத்தில் தரப்பட்ட பாகத்தை யாம உணட அதி பாதகம் இன்னும் முடிந்திலது. அதனோடு உம்மைப்பொருத அதி பாதகமுங்கூடிற்று. எமது பரம பிதாவே! நீர் பரமகருணையால் இப்போது அடியேங்களைத் தண்டித்து அப்பாவங்களைத் தொலைத்தருளினீர். ஆதலால், அடியேங்களுக்கு நீர்செய்த திருவருளுக்கு நாங்கள் செய்யுங் கைமமாறு யாது? எங்களை உமக்கு அடியார்களாகத் தருவேமெனின், அநாதிமலபெத்த பசுக்களாகிய நாங்கள் அநாதி மல முத்தபதியாகிய உமக்கு என்றும் அடிமைகளேயன்றோ? அவ்

உ

ஓம் குஹாய நம:

கற்பு

சாவித்திரி

(280-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு கூறிய அறக்கடவுளினது வசனங்களைக் கேட்ட சாவித்திரி, "உம்மால் இந்தப் பிரஜைகள் விதிப்படி ஸம்யமனம் (—அடக்குதல்) செய்யப்படுகின்றன. இந்த உயிர்களை நீர் விதியைச் செய்துகொண்டுபோகிறீர். உமது இச்சையினால் கொண்டுபோகிற தில்லை; தேவரே! அதனால், உமக்கு யமனாயிருக்கை பிரசித்தமாக இருக்கிறது. என்னால் சொல்லப்பட்ட இந்த வசனத்தையும் அறிந்து கொள்ளும். எல்லாப் பிராணிகளிடமும் செய்கையினாலும் மனத்தி னாலும் வாக்கினாலும் துரோகம் செய்யாமையும் அருளுடைமையும் கொடையும் சாதுக்களுடைய பழமையான தருமம். இந்த உலக மானது பெரும்பான்மையாக இவ்வண்ணமிருக்கிறது. மனிதர்கள் சக்தியினால் குறைந்தவர்கள்; ஸத்துக்கள் மட்டுமே தம்மைவந்தடைந் திருக்கிற பகைவர்களிடமும் கருணைபுரிகின்றார்கள்" என்று சொன் னாள். இயமன், "தாகங் கொண்டவனுக்குத் தண்ணீர்போல உன்னால் இந்த வாக்கியம் உரைக்கப்பட்டது. கல்யாணி! இந்த சத்தியவானுடைய உயிரைத்தவிர வேறு விரும்புகிற வரத்தைக் கேள்" என்றான்.

சாவித்திரி, "என்னுடைய பிதாவான அச்சுவபதி மன்னர் புத்திரபாக்கிய மில்லாதவர். அப்படிப்பட்ட என் பிதாவுக்குக் குலத்தை வளர்க்கத்தக்க நூறு ஔரஸ புத்திரர்கள் உண்டாகவேண்

வாருக, அடியேங்களைப் புதிதாகத் தருவது எவ்வாறு? சிறுவர்கள் தங்களைத் தங்கள் தந்தையர்களுக்குத் தருவது தகுதியாமோ? அறி வில்லாதேம் செய்த பிழைகள் அனைத்தையும் திருவுளத்திற் கொள் ளாது பொறுத்தருளும்" என்று விண்ணப்பஞ்செய்தார்கள்.

(தொடரும்).

டும். இந்த மூன்றாவது வரத்தை உம்மிடம் பெற விரும்புகிறேன்'' என்றாள். இயமன், ''பாக்கியவதி! குலத்திற்கு இடையறாத தொடர்ச்சியை உண்டுபண்ணுகிறவர்களும் நல்ல ஒளியுள்ளவர்களுமான நூறு குமாரர்கள் உன் பிதாவுக்கு உண்டாகட்டும். அரசகுமாரி! என்னால் உன் விருப்பம் நிறைவேற்றப்பட்டது. ஆதலால் திரும்புவாயாக, நெடுந்தூரம் வந்துவிட்டாய்'' என்றான்.

சாவித்திரி, ''கணவருக்கு அருகிலிருத்தலால் எனக்கு இது தூரமன்று; என் மனமானது நெடுந்தூரம் ஓடுகிறதன்றோ? என் மனத்தில் தோன்றியதும் என்னால் சொல்லப்படுகிறதுமான இந்த வார்த்தையை நீர் போய்க்கொண்டே கேட்பீராக. பிரதாபமுடைய நீர் விவஸ்வானி (சூரிய) னுடைய புத்திரர், அதனாலன்றோ கற்றறிந்தவர்கள் உம்மை வைவஸ்தர் என்று கூறுகிறார்கள், ஈச்வரரே! பிரசைகள் பகை நட்பு என்னும் வேறுபாடில்லாத சமமான உமது ஆட்சியினால் வசப்பட்டு நடக்கின்றன. அதனால், உமக்கு இந்த உலகத்தில் தருமராஜர் எனப்படுதல் சித்தித்திருக்கிறது, சாதுக்களிடம் உண்டாகிறதுபோன்ற நம்பிக்கை தன்னிடத்திலும் உண்டாகிறதில்லை. ஆகையால், ஜனங்கள் சாதுக்களிடம் மிக்க நம்பிக்கை வைக்கிறார்கள்'' என்று சொன்னாள். இயமன், ''பெண்மணி! கல்யாணி! உன்னால் சொல்லப்பட்டதுபோன்ற வசனத்தை உன்னைத்தவிர மற்றவர்களிடத்தில் நான் இதற்குமுன் கேட்டதில்லை; இதனால் நான் சந்தோஷமுள்ளவனாக இருக்கிறேன். இவனுடைய உயிரைத்தவிர வேறான நான்காவது வரத்தை கேட்டுக்கொள்; வரத்தைப்பெற்றுக்கொண்டு போவாயாக'' என்றான்.

சாவித்திரி, ''தேவ சிரேட்டரே! எனக்கும் சத்தியவானுக்கும் குலத்தை உத்தாரணஞ்செய்யும் நல்ல ஆற்றலுள்ள நூறு ஔரஸபுத்திரர்கள் உண்டாகவேண்டும்; இந்த நான்காவது வரத்தை உம்மிடத்தில் யாசிக்கிறேன்'' என்றாள். இயமன், ''பெண்ணே! பலமும் சக்தியுமுள்ளவர்களும் பிரீதை உண்டுபண்ணுகிறவர்களுமான நூறு புத்திரர்கள் உனக்கு உண்டாவார்கள்; உனக்கு சிரமமுண்டாகவேண்டாம்; திரும்பிப்போ; நெடுந்தூரம் வந்துவிட்டாய்'' என்றான்.

சாவித்திரி, ''அறக்கடவுளே! என்னைப்போன்ற பதிவிரதைகளுக்கு எப்பொழுதும் பதியினிடத்திலிருந்து குழந்தைகளை உண்டு பண்ணிக்கொள்வதே சநாதன தருமம். பெரியோர்கள் வாத்தைக்

கொடுத்துவிட்டு என் கொடுத்தோமென்று வாட்டமடையமாட்டார்கள், மனவருத்தத்தையு மடையமாட்டார்கள். சாதுக்களுக்கு சாதுக்களோடு சேர்க்கையானது பயனற்றதாகாது. சாதுக்கள் சாதுக்களிடத்தில் பயத்தையடையமாட்டார்கள்; சாதுக்கள் சத்தியத்தால் சூரியனை நடத்துகிறார்கள் சாதுக்கள் தவத்தினால் பூமியைத் தாங்குகிறார்கள். சாதுக்கள் சென்றதற்கும் இனி வருவதற்கும் கதியாக இருக்கிறார்கள் சாதுக்களுடைய மத்தியில் சாதுக்கள் காரியம் நடைபெறாமையால் வருந்துகிறதில்லை 'இது பெரியோர்களால் அன்போடு அடையப்பட்ட நிலைமையான ஒழுக்கம்' என்று அறிந்து சாதுக்கள் பிறருக்கு உபகாரத்தைச்செய்து அதற்குப் பிரதிப்பிரயோஜனத்தை எதிர்பார்க்கிறதில்லை. நல்லோர்களிடம் உண்டாகிற மகிழ்ச்சி வீணாகிறதில்லை; அர்த்தமும் அழிகிறதில்லை; கௌரவமும் அழிகிறதில்லை; இந்த மூன்றும் நல்லோர்களிடம் நிலைத்திருப்பதால் அவர்கள் காப்பவர்களாகிறார்கள்" என்று சொன்னாள். இயமன், "பதிவிரதையே! அறங்களோடு கூடியதும் மனத்திற்கு அனுகூலமானதுமான வசனத்தைச் சொல்லச்சொல்ல எனக்கு உன்னிடத்தில் உத்தமமான பக்தி உண்டாகிறது. நிகரில்லாத வரத்தைப் பெற்றுக்கொள்வாயாக" என்றான்.

சாவித்திரி, "தரும பூபதி! எனக்கு நூறு மக்கள் உண்டாகும் வரத்தை நீர் கொடுத்தீர்; எனது பதியை நீர் கொண்டுபோனால் எனக்கு மக்கள் எவ்வாறு தோன்றும்? உமது வார்த்தையைக் காப்பாற்றவேண்டுமானால் எனது நாயகன் பிழைக்கவேண்டும்; என்னுடைய நாயகனில்லையேல் நான் மரித்தவள் போன்றவளே; கணவனைத் தவிர சுகத்தையும் சுவர்க்கத்தையும் உயிரையும் நான் விரும்பமாட்டேன்; அறக்கடவுளே! சத்தியம் உயிரினுக்கும் சிறந்ததன்றோ? நீர் புத்திர வரத்தைக் கொடுத்தீர்; அந்த சத்தியவாக்கை நிறைவேற்றுமாறு என்பதியை வழங்குவீர்; உமது வசனம் சத்தியமே ஆகுக" என்றாள்.

சாவித்திரியின் பொருளடங்கிய வசனத்தைக்கேட்ட கூற்றுவன் மனமகிழ்ந்து, அந்த பாசத்தை அவிழ்த்துவிட்டு, சாவித்திரியே! உன் பதியைக்கொடுத்தேன்; நல்லபொருளோடும் தருமத்தோடுங் கூடிய நின் இனிய மொழிகளால் உள்ளம் மகிழ்கிறேன்; உன் கணவனை அழைத்துக்கொண்டு போ; உன்னோடு நானூறு ஆண்டுகள் சுகமே வாழ்வான். யாகங்களைப் புரிந்து தேவர்களுக்கும் தருமங்

களைப்புரிந்து உலகத்திற்கும் மகிழ்ச்சியைத்தந்து பொன்றாத புகழை யடைவான், உன்னிடத்தில் நூறு குமாரர்களை உண்டாக்குவான். அந்த நூறு புத்திரர்களும் பிள்ளை பேரன்களுள்ளவர்களும், பிரசித்தி யுள்ளவர்களும் சாவித்திரர்களென்னும் உன் பெயருள்ளவர்களுமாக நிலைபெற்றிருப்பார்கள். உன் பிதாவுக்கு உன் மாதாவான மாளவி யிடத்தில் நூறு பிள்ளைகள் உண்டாவார்கள். உன்னுடைய தம்பி மார்கள் "மாலவர்கள்" என்னும் பெயருடன் புத்திர பௌத்திர பாக்கியங்களைப்பெற்று தேவதைகளுக்கு நிகரான "திருவாளர்க ளாக விளங்குவார்கள்" என்று தரும தேவன் சாவித்திரிக்கு நல் வரங்களை நல்கி, அவளைத் திரும்பிச்செல்லுமாறு செய்து தன்னுடைய இருக்கை சென்றான்.

அறக்கடவுளிடம் விடைபெற்ற சாவித்திரி தன் கணவனுடைய உயிரில்லாத உடம்பிருக்கிற இடம் சென்றாள். தரையில் கிடந்த கணவனுடலைக் கட்டியெடுத்துத் தன் மடியில் அவன் தலையை வைத் துக்கொண்டு பூமியில் அமர்ந்தாள். சத்தியவான் உயிர்பெற்று நினைவையடைந்து, தேசாந்திரம் போய்த் திரும்பிவந்தவன்போல் சாவித்திரியை அடிக்கடி நிமிர்ந்து பார்த்து, "நெடுநேரம் தூங்கி விட்டேன், என்ன காரணத்தால் என்னை நீ எழுப்பவில்லை? என்னை இழுத்த கறுத்த புருஷன் எங்கே?" என்று வினவினான். சாவித் திரி, "அரசகுமாரரே! நீர் நெடுநேரம் என்மடியில் தூங்கினீர். உயிர் களை அடக்கும் அந்த யமபகவான் போய்விட்டார், களைபாறிவிட் டீர்; கூடுமானால் எழுந்திரும்; இருளடர்ந்த இரவு வந்திருப்பதைப் பாரும்" என்றாள்.

சத்தியவான் சுகமாகத்தூங்கி எழுந்தவனைப் போல் எழுந் திருந்து எல்லாத்திசைகளையும் வனங்களையும் பார்த்து, "நல்ல இடை யுள்ளவளே! பழங்களைவேண்டி புறப்பட்டுவந்தேன்; கட்டையைப் பிளந்து தலைவலியுற்று நிற்கமுடியாமல் உன் மடியில் உறங்கினேன்; பிறகு கோரமான இருட்டையும் ஒளியுள்ள ஒரு புருடனையும் பார்த் தேன்; அது என்ன? சாவித்திரி! கனவா? உண்மைதானா? உனக்குத் தெரிந்தால் சொல் என்று வினவினான்.

சாவித்திரி, "விரத சீலரே! இரவு அதிகப்பட்டு வருகிறது; எல்லாவற்றையும் நடந்தபடி உமக்கு நாளைக்குச் சொல்வேன்; எழுந் திரும்; உமக்கு மங்களம்; தாய் தந்தையர்களைப் பார்ப்போம்; நடு

ந்தியாய்விட்டது, இதோ அசுரர்கள் களிப்புடன் பயங்கரமாகப் பேசிக்கொண்டு உலாவுகிறார்கள்; மிருகங்களுடைய கால்களால் மிதிக்கப்படுகின்ற சருகுகளின் சத்தங்களும் கேட்கிறது; இதோ நரிகள் என்னுடைய மனத்தை நடுங்கச்செய்து தென்மேற்குத் திசையை அடைந்து கோரமாக ஊளையிடுகின்றன, வாரும்" என்றாள். சத்தியவான், "இருளூடு வனம் பயங்கரமாக இருக்கிறது, உனக்கு வழியும் தெரியாது, நடக்க வலியற்றிருக்கிறாய்" என்றான். சாவித்திரி, 'காதல! இவ்விடத்திலிருக்க உமக்கு விருப்பமில்லையானால் அதோ ஒரு மரம் எரிந்துகொண்டிருக்கிறது; அங்கிருந்து நெருப்பைக்கொணர்ந்து நாற்புறமும் இந்த விறகுகளால் மூட்டி எரியச் செய்வேன், வருந்தாதீர்; உம்மை நோயுள்ளவராகக் காணகிறேன்; நாளை காலை ஆச்சிரமம் செல்லுவோம், உமக்கு விருப்பமிருந்தால் இந்த இரவை இவ்விடத்தில் கழிப்போம்" என்றாள்.

சத்தியவான், 'தலைவலி போய்விட்டது; உடம்பு நல்ல நிலையிலிருக்கிறது, தாய்தந்தைகளை உன் உதவியால் அடைய விரும்புகிறேன், அகாலத்திலிருந்து ஒருபோதும் நான் ஆச்சிரமத்தினின்று சென்றதில்லை, மாலைக்காலம் வாராமலிருக்கும்பொழுதே என்னுடைய தாய் என்னைத்தடுப்பாள்; பகலிற்கூட நான் வெளியிற்போயிருந்தால் என் தாய் தந்தைகள் வருந்துவார்கள்; என் பிதா ஆச்சிரமத்திலுள்ளவர்களோடு என்னைத் தேடுவார். முற்காலத்தில் மிக்க துக்கத்தை அடைந்திருக்கிற தாய் தந்தைகளால் "நீ தாமதித்து வருகிறாய்" என்று பலவாறாக நிந்திக்கப்பட்டிருக்கிறேன்; இப்பொழுது நம்மைப் பற்றி அவர்கள் எவ்வாறு வருந்துகிறார்களோ என்று கவலைப்படுகிறேன். முன்பு ஒருகாலத்தில் முதியோர்களான மாதா பிதாக்கள் நொவருடன், இரவில் கண்களில் நீர் பெருகுகின்றவர்களும் அதிக துக்கமுள்ளவர்களும் அன்புள்ளவர்களுமாகி "அருமைக்குழந்தாய்! உன்னைவிட்டு ஒரு முகூர்த்தகாலங்கூட நாங்கள் ஜீவித்திருக்கமாட்டோம்; புத்திர! நீ உயிரோடிருக்கும் வரையில்தான் நாங்கள் உயிர் வாழ்வோம். முதுமைப்பருவமுற்று குருடர்களான எங்கள் இருவருக்கும் நீ தான் கண்; உன்னால் நமது குலம் விருத்தியடைய வேண்டும்; எங்களிருவருக்கும் பிண்டமும் கீர்த்தியும் சந்தானமும் உன்னைச் சார்ந்திருக்கின்றன" என்று என்னைப் பார்த்துப் பலமுறை சொன்னார்கள். தாய் முதியவள்; தந்தையும் முதியவர்; அவ்விருவருக்கும் நானல்லவோ ஊன்றுகோல். அவ்விருவரும் இந்த இரவில்

என்னைப்பாராமையால் எவ்வாறு வருந்துவரோ? எந்த நித்திரையால் என் தாயும் தந்தையும் ஐயமுற்றார்களோ? நானும் பெரும் ஆபத்தை அடைந்தேனே. அந்த நித்திரையை வெறுக்கிறேன். தாய்தந்தையாரைவிட்டு நான் உயிரோடிருக்க விரும்பவில்லை. கண்ணில்லாத என் பிதா மனக்குழம்பி ஆச்சிரமத்திலுள்ள ஒவ்வொருவரையும் என்னைப் பற்றி விசாரிப்பார், இது நிச்சயம், கல்யாணி! நான் தாய்தந்தையரை கவனிப்பதுபோல் என்னுடைய க்ஷேமத்தையுங்கூட கவனிப்பதில்லை. முன்னறி தெய்வங்களாகிய என் அன்னையும் பிதாவையும் காப்பாற்றுவதற்காகவே நான் உயிரோடிருக்கிறேன். அவர்கள் எனக்கு முக்கியமான தெய்வங்கள். என்னால் எப்பொழுதும் வழிபடத்தக்கவர்கள். அவர்கள் விஷயத்தில் இப்படிப்பட்ட இந்த பழமையான விரதமானது எப்பொழுதும் எனக்கு இருக்கிறது" என்றான்.

தர்மாத்மாவும் குருபக்தியுள்ளவனுமான அந்த உத்தமன் இவ்வண்ணம் உரைத்து பெருந்துன்பத்தால் மூடப்பட்டவனாகி இரு கைகளையும் உயர எடுத்துக்கொண்டு உரத்த குரலுடன் அழுதான். துக்கப்பட்டு அழுகின்ற தீனனாகிய தன் கணவனைப்பார்த்து சாவித்திரி தன்னிரு கைகளாலும் கணவனது கண்ணீரைத் துடைத்து "என்னால் தவமானது செய்யப்பட்டிருந்தால், என்னால் தானமும் ஓமமும் செய்யப்பட்டிருந்தால், என்னுடைய மாமியாருக்கும் மாமனாருக்கும் பதிக்கும் இந்த இரவானது நன்மையைத் தருவதாகுக. விளையாட்டுக்களிலும் இதற்குமுன் பொய் சொன்னதாக எனக்கு நினைவில்லை. அந்த சத்தியத்தால் என் மாமியாரும் மாமனாரும் உயிரோடிருக்கவேண்டும்" என்று சொன்னாள். சத்தியவான், "மாதா பிதாக்களுடைய தரிசனத்தை விரும்புகிறேன்; தாமதிக்காமல் வருவாய். என் தாய்தந்தை உயிரோடிருக்கப்பார்ப்பேனோ? தாய்க்காவது தந்தைக்காவது ஏதாவது தீங்கு நேர்ந்திருக்கக்கண்டால் நான் உயிரோடிருக்கமாட்டேன். என்னைத்தொட்டு சத்தியம் பண்ணுகிறேன். உனக்கு எண்ணமிருந்தால், நான் உயிரோடிருக்க விரும்பினால் எனக்குப் பிரியத்தைச் செய்யவேண்டுமென்ற எண்ணம் உனக்கு இருந்தால் விரைவாக ஆச்சிரமம் செல்வோம் புறப்படு" என்றான்.

உத்தமியான சாவித்திரி, பிறகு எழுந்திருந்து கூந்தலை முடிந்து கணவனை இருகைகளாலும் தழுவித்தூக்கி நிறுத்தினாள். சத்தியவானும் எழுந்திருந்து கையினால் அங்கங்களைத் துடைத்துக்கொண்டு எல்லாத் திசைகளையும் பார்த்துப் பழக் கூடையைப் பார்த்தான்.

கார்த்திகேயன் துணை.

நாம் ஏன் பிறந்தோம்?

சச்சிதானந்தம்.

எத்தனையோ ஊழிகாலமாக எண்பத்துநான்கு லக்ஷ யோனி வாய்தோறு முற்பவித்து மரிக்கின்ற நாம் இப்பொழுது பெறுதற்கரிய பிறவியாகிய மனிதப்பிறவியைப் பெற்றுளோம். அதிலும் சிவாலயங்களில்லாத நாடுகளில் பிறக்காமல் சிவமணங் கமழும் பாரத நாட்டில் பிறந்தோம். அதிலும் கடவுள் இல்லையென்ற மரபில் பிறக்காமல் தெய்வ சிந்தனையையுடைய மரபில் பிறந்தோம் அதிலும் கொலை களவு காமம் பொய் முதலிய துற்குணங்களில்லாத நற்றவத்தோரிடம் பிறந்தோம் அதிலும் ஆண்டவனால் அருளப்பட்ட கனத்த செந்தமிழை வளர்க்கும் பாரத புத்திரர்களிடம் பிறந்தோம்.

சாவித்திரி, நாயகனை நோக்கி, நாளை இந்தப் பழங்களைக் கொண்டு போவீர்; இந்த கோடாலியை நான் கொண்டுவருவேன்" என்று கூறி, பழம் நிறைந்த கூடையை ஒரு மரக்கிளையில் தொங்கவிட்டுக் கோடாலியை எடுத்துக்கொண்டு பதியருகில் வந்து, இடத்தோளில் பதியின் கரத்தை வைக்கும்படிச்செய்து, வலக்கரத்தால் அவனைக் கட்டிக்கொண்டு சென்றாள். சத்தியவான், "பயந்தவளே! நடந்து பழக்கமிருப்பதால் எனக்கு வழி தெரிகிறது; மரங்களின் நடுவில் காணப்படுகிற நிலவினாலும் வழி தெரிகிறது; கல்யாணி! எந்த வழியாக வந்தோமோ அந்த வழியில் வந்தபடி செல்வாயாக; ஆலோசியாதே இந்தப் பலாசமரங்களடர்ந்த தோப்பில் வழியானது இரண்டாகப் பிரிகிறது; அதற்கு வடக்கில் எந்த வழியிருக்கிறதோ அந்த வழியில் விரைவாகச்செல் நான் சுகமாக இருக்கிறேன்; மாதா பிதாக்களை நான் பார்க்கவிரைகிறேன்" என்று சொல்லிக்கொண்டே பத்தினியுடன் விரைவாக ஆச்சிரமத்தை நோக்கிச்சென்றான்.

(தொடரும்).

அதிலும் முகத்தின் இரகசியம், விகடம், மந்திரி கதை, இராஜா கதை, நாவல் முதலிய அறிவையழித்து நரகத்திலுள்ளாக்கும் நூல்களைக் கற்காமல் பெரியோர்கள் கூறிய திருப்புகழ், தேவாரம், திருவாசகம், அருட்பா முதலிய முத்தியை நல்கும் நூல்களைக்கற்ற புண்ணியசீலர்களிடம் பிறந்தோம். அதிலும் (1) பாசப்பெயர், (2) பசுப்பெயர்களில்லாமல், (3) பதிப்பெயரையுடையவர்களுடைய வயிற்றில் பிறந்தோம். இவ்வருமையான பிறவியை நாம் எதற்காகப் பெற்றோம்? இப்பிறவியை நாம் அடைவதற்கு எவ்வளவோ சிரமத்தை யடைந்தோம். வடகடலிலுள்ள நுகத்துளையுள் தென் கடலிலுள்ள ஏர்க்கொம்பு காற்றின் வேகத்தினாலும் அலையின் வேகத்தினாலும் ஒன்றாகச்சேருவது எப்படி அருமையிலும் அருமையோ அதுபோல், நாம் மானிடப்பிறவியை பெறுவதற்கு புல்லாய், புழுவாய், மரமாய், கல்லாய், பாம்பாய், இன்னோரன்ன பிற உயிர்களாகப் பிறந்து, சிறிது சிறிதாகப் புண்ணியத்தைச் செய்து, கிடைப்பதற்கரிய இம்மானிட யாக்கையைப் பெற்றோம். "நூறுகோடி ஜன்மங்களில் நன்றாய் அநுஷ்டிக்கப்பட்ட புண்ணிய கர்மங்களாலன்றி கிடைப்பதில்லை

....ஸதகோடி ஜன்மஸாக்நதை புண்யைர் விநாப்யதே

என்று ஆதிசங்கரர் கூறியிருக்கின்றார். மனித தேகத்தால்தான் ஆண்டவனைக்காணமுடியும்; மனித தேகத்தால்தான் பவசாகரத்தை கடக்கமுடியும்; ஆண்டவன் புகழைக் கூறவும் முடியும். வல்லீதேவ சேனகாந்தனுக்குப் பணிவிடைசெய்வதற்குச் சாதகமாகவிருப்பதும் இம்மானிடப் பிறவியேதான்,

இத்யாதி காரணங்களால் தாயுமானாரும்.

எண்ணரிய பிறவிதனில் மானிடப்பிறவிதா
னியாதினு மரிதரிது கா
ணிப்பிறவி தப்பினா லெப்பிறவி வாய்க்குமோ
யாது வருமோ வறிகிலேன் — என்றும்

ஔவையார்—

"அரிதரிது மானிட ராதலரிது" — என்றும்

---

(1) உலகத்தில் அழிதற்பாலனவாகிய பெயர்கள், (2) பிறத்தலை இறத்தலையுடைய சிறுதெய்வப்பெயர்கள், (3) அறுமுகனுடைய பெயர்களும் அவனடியார்களுடைய பெயர்களுமாம்

அறநெறிச்சாரத்தில்—

"மக்க ளுடம்பு பெறற் கரிது" என்றும

பதிபசுபாசவிளக்கத்தில்—

"மக்க ளாக்கையிற் பிறந்தலே யரிது" என்றும

"அரிது மானிட யாக்கையிற் பிறத்தல்" என்றும

திருமந்திரத்தில்—

"பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்" என்றும்

சிவஞான சித்தியாரில்—

அண்டசஞ் சுவேத சங்கள் உற்பிச்சம் சராயுசத்தோ(டு)
எண்டரு நாலெண்பத்து நான்குநூ றுயிரத்தால்
உண்டுபல் யோனி யெல்லாம் ஒழித்துமா னுடத்து தித்தல்
கண்டிடில் கடலைக் கையால் நீந்தினன் காரியங் காண்

என்றும

நம் அருணகிரிநாத சுவாமிகள் (அலங்காரத்தில்)—

'பெறுதற் கரிய பிறவியைப் பெற்று" என்றும்

வராஹோபநிஷத் அத்தியாயம் 2—ல்—

"துர்லபம் ப்ராப்ய மாநுஷ்யம்" என்றும

பிரம்மபுராணம்: அத்யாயம் 119-ல்—

"கதம் ஸில்லபதே ஜன்ம தேஹம் மாநுஷ்யகம்" என்றும

கருடபுராணம்: உத்தரகாண்டம் அத்யாயம் 2-ல்—

"........புத்தி மத்ஸு நர: சிரேஷ்டா" என்றும

சங்கரர்: விவேகசூடாமணியில்—

"ஜந்தூநாம் நரஜன்ம துர்லபமத:" என்னும்

மிகமிகச் சிறப்பித்துள.

மற்ற பிராணிகள் குறுக்காக வளர்கிறது; அவைகளுக்கு திரியக்கு ஜந்து என்று பெயர். மனிதர் மட்டும் மேல்நோக்கி வளர்கின்றனர். இதனாலேயே மனித ஜன்மம் உயர்வென்று அறியலாம். ஆகவே இவ்வரும் பிறவியை எதற்காக நாம் பெற்றோம்? எதற்காக மனத்தை யடைந்தோம்? எதற்காகக் கரத்தைப்பெற்றோம்? ஏனைய பிராணிகளுக்கு மனம் இல்லை. மனிதனென்றால் மனத்தையுடையவன் என்று ஒரு பொருள். எதற்காக ஆண்டவன் நமக்குமட்டும் இந்த உறுப்புக்களை படைத்திருக்கிறுனென்று நாம் யோசிப்பதே கிடையாது. ஒரு எஜமானுனவன் ஒரு வேலைக்காரனிடத்தில் ஏர்க்

காலைத்தந்து உழுது பயிர்செய்து ஜீவிப்பாய் என்று உத்தரவிட்டான். அந்த வேலைக்காரனானவன் அக்கலப்பையை எடுத்துக்கொண்டு அத னால் உழுது பயனை அடையாமல் அக்கலப்பைக்கு நல்ல பட்டுவஸ்திரம் கட்டுகிறான், நல்ல புஷ்பாரங்களைப் பூட்டுகிறான், நல்ல வாசனைத்திரவி யங்களைப் பூசுகிறான்; அக்கலப்பையை காரில் வைத்துக்கொண்டு ஊர் வலமாக வந்தான். பெரியோர்கள் அவனைப் பித்தன் என்று கூறி சிரிக்கமாட்டார்களா? எஜமானன் சினந்து ஆட்களைவிட்டு தண்டனை செய்யமாட்டானா? அதுபோல் நாம் இருக்கின்றோம். எஜமான னாகிய ஆண்டவன் வேலைக்காரனாகிய ஆத்மாவிடத்தில் ஏர்க்காலாகிய மனித ஜன்மத்தைத் தந்து அன்பு என்கிற நிலத்தையுழுது தருமம் என்ற விதையையூன்றி அதனால் விளைந்த சிவானுபோகத்தையுண்டு பிறப்பிறப்பாகிய பசியை நீக்கிக்கொள்வாயென்று கட்டளையிட்டால் நாம் அதை மறந்து இம்மனித சரீரத்துக்கு நல்ல பட்டுவஸ்திரத்தைச் சாத்தி, பூஷணங்களையணிந்து, செண்ட், அத்தர் முதலிய வாசனைத் திரவியங்களைப்பூசி, ரிக்ஷா, கோச்சு, மாரிஸ்மைனர் (Maurice Minor) முதலிய வாகனாதிகளிலேறி ஊர்வலம் வருகின்றோம். பற் றற்ற பெரியோர்கள் ஏன் நம்மைப்பார்த்து சிரிக்கமாட்டார்கள்? எஜமானனாகிய ஆண்டவன், தூதுவனாகிய இயமனைவிட்டு தண்டனை புரிவான். அந்தோ! மாமிசம், இரத்தம் இவைகளாற் பூசப்பட்ட தாயும், தோலினால் மூடப்பட்டதாயும், துர்க்கந்தம் உள்ளதாயும், மலமூத்திரங்கள் நிறைந்ததாயும்; கிழத்தனம், துன்பம், வியாதிகளை யுடையதாயும், அழியத்தக்கதாயும், அழுக்குள்ளதாயும் இருக்கிற இந்த சரீரத்தை போஷிப்பதிலேயே வாளாநாளைக் கழிக்கலாமா? பாழுங் கிணற்றிலிருக்கிற தவளையைப்போலல்லவோ நாம் சம்சாரத் தில் அழுந்தியிருக்கின்றோம். இதற்காகவா கிடைப்பதற்கரிய பிறவி யைப் பெற்றோம்? ஐயோ! வாழைக்குருத்தைப்போல் இம்மனித சரீரத்தை உபயோகமற்றதாக்கி விடுகின்றோம். "சிறந்ததாகிய மானிடப்பிறப்பையடைந்தும் நல்ல நிலைமையிலுள்ள பொறிகளைப் பெற்றிருந்தும், யார் ஆன்மாவுக்கு நன்மையான காரியத்தை யறிய வில்லையோ அவன் ஆன்ம பகைஞனாகிறான்.

பிராம்மதர்மத்தில்—

' ப்ராப்ய சாப்யுத் தமம் ஜன்மலப்த்வா சேந்த்ரிய ஸௌஷ்டவம் "

என்று கூறப்பட்டிருக்கிறது.

இச்சரீரம் நமக்குச் சொந்தமென்று எண்ணி மோசம்போகப் படாது. இச்சரீரம் இரவலாக வாங்கிக்கொண்டு வந்திருக்கிறோம். சரீரத்திற்குடையவன் ஒரு நாளைக்குத் திருப்பி வாங்கிக்கொண்டுபோய் விடுவான். ஆகவே சரீரத்திற்குடையவன் கேளாமுன்னம் மனித சரீரத்தை எதற்காக இரவல் வாங்கிக்கொண்டு வந்தோம். இதனால் என்ன காரியம் செய்யவேண்டும் என்பதை ஒவ்வொருவரும் யோசிக்க வேண்டும். நாம் இதனைச் சுத்தமாகவே மறந்துவிட்டோம்! ஒருவன் மற்றொருவனிடமிருந்து சாந்தோக்யோபநிஷத்து வியாக்யான புத்தகத்தை இரவலாக இரண்டு நாளையில் தருவதாக வாங்கிக்கொண்டு போனான். அப்புத்தகத்தில் நான்கு வரிகளைப்படித்தபின்பு "ஹா ஹா! இப்புத்தகம் நன்றாக இருக்கிறது, இதற்குக்கடுதாசி அட்டையா கப்போடுவது" என்று அக்கடுதாசி அட்டையை நீக்கிப் பட்டு அட்டை போடுவித்தான்! மறுபடியும் தனக்குத்தானே சொல்லிக்கொள்ளு கிறதாவது—"கிரந்தங்களுக்கெல்லாம் மேலானது உபநிஷத்து! அதற்கு உயர்ந்த அட்டையே இருக்கவேண்டு" மென்று எழுந்திருந்தான்; ஆயிரம் ரூபாய் எடுத்துக்கொண்டு தட்டான்வீட்டுக்குப்போய் "இப்புத்தகத்துக்குத் தங்கத்தினால் அட்டையும் அவ்வட்டையின்மேல் விலையுயர்ந்த ரத்தினங்களையும் பதிக்கவேண்டு" மென்று தட்டானிடம் ஆயிரம் ரூபாய் தந்தான். வேலை யாரம்பித்து நடத்திக் கொண்டுவர நாள் மூன்றாயிற்று; அப்போது இரவல் கொடுத்தவன் "இரண்டு நாளையில் திருப்பிக்கொடுக்கிறேன் என்று கூறினானே; இன்னும் வரக்காணோமே" என்று தானே அவன் வீட்டிற்குப் போக, அவன் வீட்டிலில்லாமையால் தட்டான் வீட்டில் சந்தித்தான். பணத்தைச் செலவழித்துத் தன் புத்தகத்தை அலங்கரித்துக்கொண்டிருப்பதையும் பார்த்தான்; ஓஹோ! புத்தகத்திற்கே மோசம் வந்துவிட்டாற்போலிருக்கிறதே! என்று நினைத்து இரவல் வாங்கினவனுடைய கையில் அரைகுறையாய் வேலைமுடித்திருக்கிற தன் புத்தகத்தைப்பறித்துக்கொண்டு போய்விட்டான். அப்பொழுது இரவல் வாங்கிக்கொண்டுவந்தவன் யாது நினைக்கின்றான் "இரவலாக வாங்கிக் கொண்டுவந்த புத்தகத்தை இரவல் என்பதை மறந்துவிட்டேன்; எதற்காக இப்புத்தகத்தை வாங்கிக்கொண்டு வந்தோமென்பதையும் மறந்துவிட்டேன், இரவல் புத்தகத்தைச் சொந்தமென்றெண்ணி, அதற்கு அலங்கரித்துக்கொண்டிருந்தேன்; புத்தகத்திலுள்ள கூடார்த்தங்களைத் தெரிந்துக்கொள்ளாமற் போனேன்; இனி என்னை நம்பி

இரவல் கொடுக்கமாட்டான்" என்று பறபல எண்ணி ஏங்கின்றனன் இதனைப்போல அருமையான மானிடச் சரீரத்தை இரவலாகப்பெற்றிருக்கிற நாம் இச்சரீரம் இரவல என்பதனை மறந்துவிட்டோம் எதற்காக சரீரத்தை இரவலாக வாங்கிக்கொண்டு வந்தோமென்பதையும் மறந்துவிட்டோம் !

"பரோபகாரார்த்தம் இதம் சரீரம்" மோக்ஷ சாதனத்திற்காகவே இச்சரீரமென்பதனை மறந்து இச்சரீரத்தை தனதாக எண்ணி இச்சரீரத்தையே அலங்கரித்துக்கொண்டிருக்கின்றோம். இச்சரீரம் போனால் மறுபடியும் மானிட சரீரம் கிடைக்காது. ஏனெனில் முன் இரவல் கொடுத்து மோசம் போனவன் மறுபடியும் இரவல் கொடுக்கமாட்டான். ஆகையால் இம்மானிட ஜன்மத்தையடைய முடியாமற்போகிறோம். ஆகவே, இந்த யாக்கை இருக்கும்பொழுதே நற்கருமங்களைச்செய்யவேண்டும். காயம், வாக்கு, மனம் என்ற திரிகரணங்களாலும் எப்பொழுதும் பாபத்தைச்செய்யப்படாது. பிறது பொருளையடையவேண்டுமெனனும் விருப்பம், பிறது கேட்டைக் கருதுதல், பாக்கியும், கடவுளும் இல்லை என்ற கருத்து, இம்மூன்றும் மனதினால் செய்யும் பாபங்களாகும், கடுஞ்சொல், பொய், புறங்கூறுதல், பயனில்சொல், இந்நான்கும் வாக்கினாற்செய்யும் பாபம்; கொடாத பொருளைக் கவர்தல், உயிர்களைக் கொல்லுதல், பிறர் மனைவியோடு சேருதல் இம்மூன்றும் உடலினால் செய்யும் பாபம் ! இதனை பிரம்மகருடத்தில் முறையே

பரத்ரவ்யேஷ்வபித்யாநம் மநஸா(அ)நிஷ்டசிந்தனம்
விததாபி நிவேசஸ்ச த்ரிவிதம் கர்மானசம் என்றும்

பாருஷ்ய மந்ருதந்சைவ பைசுன்யந்சாபிசர்வச. அசம்
பத்தப்ரலாபஸ சவாங்மயம் ஸ்யாச்சதுர்விதம் என்றும்

அதத்தானுபாதானம் ஹிம்சாசைவாவிதானத.
பாதாரோபசேவாசசாரீரம் த்ரிவிதம் ஸ்ம்ருதம் என்றும்

கூறப்படுகிறது.

மனதினால் கெட்ட நினைவை நினைத்துப் பாவத்தை செய்கின்றோம். வாயினால் பொய் பேசி பாவத்தை செய்கின்றோம். உடலினால் பிறமாதரைத் தழுவுதல் முதலிய கெட்ட காரியங்களைச் செய்து பாவத்தை சம்பாதித்துக்கொள்ளுகிறோம். இதற்காகவா மனம்,

வாக்கு, காயங்களை நடக்க ஆண்டவன் தந்திருக்கின்றார். வம்புகளும் பொய்களும் பேசினால் "வாக்கைக்கொடுத்துப்பயன் இல்லை" என்று வாயில்லாத ஜந்துக்களாகப் பிறக்கவைப்பான். ஆகவே, நம ஆயுள் உள்ளவரை நல்ல காரியங்களைச் செய்யவேண்டும். நமக்கு ஆண்டவனால் தரப்பட்ட ஆயுள் நூறு வருடமாகும் வேதத்தில் 'சதாயு: புருஷ:' நூறு வயதுடைய மனிதன் என்றும் பர்த்ருஹரி ஆயுர் வர்ஷ சதம் ந்ருணாம்.......... என்றுங் கூறியிருக்கின்றார். நமக்கு ஆயுள் இருக்கும்போதே மனித சரீரத்தினால் அடையவேண்டிய பேற்றை யடைந்தேதீரவேண்டும் ஏனெனில்

'இப்பவோ பின்னையோ மத்யகாலத்திலோ
இரவிபடும் நேரத்திலோ
இரவிலோ பகலிலோ உதயகாலத்திலோ
எந்தெந்த நேரத்திலோ
அப்பிலோ தீயிலோ நாயிலோ பேயிலோ
அரவிலோ இடியதனிலோ
ஆறாத புண்ணிலோ அடர்நோவு தன்னிலோ
ஆயுத வகைகள் எதிலோ
செப்பரிய வீட்டிலோ மேட்டிலோ காட்டிலோ
தெருவிலோ திண்ணை தன்னிலோ
செகந்தன்னில் எந்தெந்தவிட மதனிலோ
சீவன் விடுகின்ற நேரம்
...."

என்று கூறினாற்போல்

எப்போ தாகிலுங் கூற்றுவன் வருவான்
அப்போ தந்தக் கூற்றுவன் தன்னைப்
போற்றினும் போகான் பொருளொடும் போகான்
சாற்றவும் போகான் தமரொடும் போகான்
நல்லா ரென்று நல்குதா வறியான்
தீயா ரென்றுஞ் செல்வரென் றுன்னான்
தரியா தொருகணம் தருகணாளன்
உயிர்கொடு போவா னுடல்கொடு போகான்

ஆகவே இயமன் வந்து உடல் கொடுபோவதற்குமுன் மனதினால் நல்லகாரியங்களைச்செய்யவேண்டும். ஆண்டவருடைய ஆறெழுத்

தைச்சிந்திக்கவேண்டும். மனதைத்தந்த மஹாநுபாவனுடைய பாதத்தைத் தியானம் செய்யவேண்டும். தியானம் எப்படிச் செய்ய வேண்டுமெனபதனை யஜுர் வேதத்தில் அமிர்தநாதோபநிஷத்தில்

அந்தவத்பஶ்யரூபாணி சப்தம்பதிரவச்ச்ருணு
காஷ்டவத்பஶ்ய வைதேஹம் ப்ரசாந்தஸ்யேதிலக்ஷணம்

(இதன் பொருள்) (குருடனைப்போல் ரூபங்களைப்பாரப்பான், செவிடனைப்போல் சப்தங்களைக்கேட்பான், கட்டையைப்போல் சரீரத்தைப் பாரப்பான் இதுவே சாந்தியை அடைந்தவனுக்கு லக்ஷணம்).

வாக்கை எதற்காகப்பெறறோம்? ஆண்டவனுடைய புகழைப் பேசுவதறகாகவே. தோத்திரம செய்யவேண்டும், சத்தியத்தைச சொல்லவேணடும.

உடம்பை எதற்காகப்பெறறோம்: கோயிலுக்குப்போய் வலம் வருவதற்காக, கண்களால அவன் அழகைப்பாரக்கவேண்டும், கரங்களால் மலர்களைக் கொண்டு ஆண்டவனை அர்சசிக்கவேண்டும

பீடுறு மானிடப் பிறப்பு வாய்ந்துநல்
லேடவிழ் மலரினு லிறையைப் பூசியார்
பாடமை நாளெலாம் பாழுக் கிறைப்பவர்
மூடரை யெண்ணுங்கால் முந்தி நிற்பரே.

—பிரபுலிங்கலீலை.

நாம ஒரு பச்சிலையைக் கோழிக்கொடியோன் பாதத்தில் சாத்துல் உடனே மோக்ஷ உலகம் உண்டாகும. பிரமோத்ரகாண்டத்தில்:

பத்ர மாத்ரேண சந்துஷ்டோ யோததாதி நிஜ·
பதம் அஹோ ஈஸ்வர பூஜாயா மஹாத்மியம் விஸ்மயாவஹம்

(இ-ல) 'ஒரு பச்சிலையால் பிரியமடைநத ஈச்சுரன் தனது பதத்தையளித்தருளகினறுன். ஐய! பரமேஸ்வரனுடைய பூசையின் மான்மியம் வியப்பாயிருக்கிறது) எனவே கரங்களினுல் மலர்களைக் கொண்டு வாடிவேலையனைப்பூசித்து வந்தனைசெய்யவேண்டும் அதுதான் கரம் படைத்ததன் லாபமாகும். சுருங்கக்கூறுமிடத்து ஆவி; பொருள், உடம்பு மூன்றையும் ஆண்டவனுடைய விஷயத்திலேயே உபயோகித்தல் வேண்டும். அப்பொழுதுதான் ஆன்ம லாபத்தையடை

வோம். இனிப் பிறவா நெறியைப் பெறுவோம். இதற்காகத்தான் நாம் பிறந்தோம்,

சிந்தனைநின் றனக்காக்கி நாயினேன்றன்
கண்ணிணைநின் றிருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கி யைம்புலன்களார
வந்தனை யாட்கொண் டுள்ளேபுகுந்த பிச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே இரண்டு மிலி தனியனேற்கே.

—வாதவூரர்.

உபதேசம்

பிறரிடத்திற் பேசும்போது இனிமையாகப் பேசு, கடிந்து பேசாதே. உன்னிடத்தில் பிறர் கடிந்து பேசுங்கால் உன் மனம் எவ்வாறு வருந்துகிறது? அதுபோல் நீயும் கடிந்து பேசுங்கால் பிறர் மனம் வருந்தும். பகைவரிடத்திலுங்கூட இனிமையாகப் பேசு. உன்னுடைய இனிய மொழிகளால் பகைவருள்ளமும் கரைந்துவிடும்.

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருக்கக் காய் கவர்ந் தற்று.

என்ற உத்தரவேத சத்திய வாக்கை ஆழ்ந்து நோக்குக. நீ பேசுகின்ற ஒவ்வொரு சொல்லிலும் அமிர்தம் கலந்திருக்கட்டும். விடங் கலந்த வார்த்தையை எப்போதும் மறந்தும் பேசாதே. தாழ்ந்தவரிடத்தும், புதியவரிடத்தும், மற்றெல்லோரிடத்திலும் இனிமையாகப் பேசு.